1992 மார்ச் 10]

இன்றைக்குப் பணிகள் செய்து முடிக்கப்பட்டு இருக்கின்றன. இன்னும் பல்வேறு பணிகள் இன்றைக்கு கடல் அரிப்பு தடுப்புத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றன. அதன் பட்டியலைப் படித்தால் கொஞ்சம் காலதாமதம் ஆகும். ஆகவே, பல்வேறு பணிகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் எடுக்கப்பட இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மீன்பிடி வலை சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கேட்டார்கள். இது சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. குமாரதாஸ் அவர்கள் ஏற்கனவே சட்டமன்றத்தில் கேட்டிருக்கிறார்கள். அதற்கான விரிவான விளக்கத்தை ஏற்கனவே தந்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 151, திரு. ச. காந்திராஜன், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

151—

அழகாபுரி அணைக்கட்டிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம்.

*2787—திரு. ச. காந்திராஜன்:

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வேடசந்தூர் தொகுதி, அழகாபுரி அணைக்கட்டில் இருந்து காசிபாளையம், கல்வார்பட்டி மற்றும் அதனைச் சார்ந்த கிராமங்களுக்கு கிராமப்புற குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் வேடசந்தூரின் மற்ற பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. ச. காந்திராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த அழகாபுரி அணைக்கட்டிலிருந்து வேடசந்தூர் தொகுதியில் உள்ளடங்கிய வேடசந்தூர் ஒன்றியம் மற்றும் குஜிலியம்பாறை ஒன்றியங்களுக்குக் குடிநீர் வழங்குவதற்கான திட்டங்கள் குடிநீர் வடிகால் வாரியத்தால் அனுப்பப்பட்டு இருப்பதாக அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். மிகுந்த மோசமான சூழ்நிலையில் குடிநீர்ப் பிரச்சினை உள்ள இப்பகுதிக்கு விரைவில், அடுத்த ஆண்டிலாவது, கருணை உள்ளத்தோடு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து, மாண்புமிகு

புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலாவது எங்களுடைய குடிநீர் பஞ்சத்தை நீக்குவார்களா? அதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் முன் அனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலனை செய்து முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 152, திரு. பி. வி. இராஜேந்திரன். மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

152—

கிராமக் கூட்டுறவு வங்கி.

*5150 திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கிராமக் கூட்டுறவு வங்கிகளை ஏற்படுத்தும்போது 2,000 மக்களுக்கு ஒரு கூட்டுறவு வங்கி என்று செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2,000 மக்கட் தொகையை மட்டுமே அடிப்படையாக வைத்துக் கொண்டு ஒரு கிராமக் கூட்டுறவு வங்கியை அமைக்க இயலாது. அந்த ஒரு அடிப்படையை மட்டும் வைத்துக்கொண்டு பார்த்தால் சங்கம் தன்னிறைவுடன் செயல் படும் சாத்தியமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் அனைத்தும் லாபகரமாக இயங்கிக்கொண்டு இருக்கின்ற ஒன்று. நான் இந்தக் கேள்வியிலே 2,000 என்று குறிப்பிட்டிருந்தாலும் 30 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒரு வங்கி என்ற வீதத்தில்கூட என்னுடைய தொகுதியிலே கூட்டுறவு வங்கிகள் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. அதில், 30,000 என்கின்ற அடிப்படையை உடனடியாகக் குறைத்து, குறைப்பது என்று சொன்னால், துரதிஷ்டவசமாக கூட்டுறவுச் சங்கங்களுக்குள்ளே கட்சி அரசியல் நுழைந்து இருப்பதால் அவர்கள் ஜெனரல் பாடியிலே ரெசல்யூஷன் போட்டு தர மறுக்கின்றார்கள். அதனால் பிரிக்கப்படாமலேயே, 6